# <u>வன்னியர் சமுதாய மாணவ / மாணவியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!</u>

அரசுப் பணியில் சேர, மிக உயர்ந்த போட்டித் தேர்வாக கருதப்படுவது மத்திய அளவில் **UPSC மூலம் நடத்தப்படும் IAS / IPS போட்டித் தேர்வும்**, மாநில அளவில் **துணை ஆட்சியர் / காவல் துணைக் கண்காணிப்பாளர்** உள்ளிட்ட பணிகளுக்கு TNPSC மூலம் நடத்தப்படும் குரூப் 1 தேர்வாகும்.

மேற்கண்ட தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு சென்னை போன்ற பெருநகரங்களில் தனியார் பயிற்சி நிலையங்கள் கட்டணத்துடன் பயிற்சியை அளிக்கின்றன.

வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை எளிய மாணவ/ மாணவியர்கள் போட்டித் தேர்வு எழுத ஆர்வமிருந்தும் பணம் மற்றும் தங்கும் வசதி இல்லாத காரணத்தினால் சென்னையில் உள்ள தனியார் பயிற்சி மையங்களில் சேர முடியாத சூழ்நிலையில் உள்ளனர். இது போன்ற தகுதியும், திறமையும் உள்ள **வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பிரத்யேகமான தங்கும் விடுதி வசதியுடனும், மாணவிகளுக்கு ரூ 2000/- ஊக்கத்தொகையுடனும் (மாணவிகள் தங்கும் விடுதி செலவுகளுக்காக), மத்திய குடிமைப் பணி தேர்வுகளுக்கு UPSC (IAS, IPS, IRS,) <u>11 மாத கால இலவச பயிற்சி</u> வகுப்புகள் தரமான மற்றும் அனுபவமுள்ள பயிற்சி வல்லுநர்களைக் கொண்டு,** வள்ளல் பி. டி. லீ செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வழங்கப்படவுள்ளது.

போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் நேரிலோ அல்லது இணையதளம் வாயிலாகவோ தங்களது சுயவிவரங்களைக் கீழ்கண்ட **மின்னஞ்சல் முகவரிக்கு** அனுப்ப வேண்டும்.

வள்ளல் பி. டி. லீ செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் **தகுதித்தேர்வு** மற்றும் **நேர்முகத்தேர்வின்** அடிப்படையில் **முதல் 100 மாணவ, மாணவியர்கள்** தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்காணல் முடியும் வரை பயிற்சி அளிக்கப்படும். **இப்பயிற்சி மையத்தில் 2022-23ம் ஆண்டு TNPSC குரூப் II/IIA தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அதில் 15 மாணவர்களில் நான்கு மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

இப்பயிற்சி மையம் வள்ளல் பி. டி. லீ செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளையின் தலைவர், அறங்காவலர்களின் ஆலோசனை மற்றும் தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியத்தின் ஆதரவுடன் செயல்படும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்திற்கான கடைசி நாள் | : **17.07.2024** |
| தகுதித்தேர்வு நாள் | : **20.07.2024** |
| நேர்முகத் தேர்வு நாள் | : **20.07.2024** |
| பயிற்சி துவங்கும் நாள் | : **24.07.2024** |

**தொடர்புக்கு:**


அலைபேசி எண் : 8807778029, 9342888707

மின்னஞ்சல் : ptleecniasacademy@gmail.com

இணையதள முகவரி : www.ptleecntrust.com

**தலைவர்**,

பி டி லீ செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை